Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 311

செவ்வாய்க்கிழமை 03 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

வடக்கு - கிழக்கில்

# நீதிமன்ற நடவடிக்கைகள் முற்றாக முடங்கும்!!

முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் தொடர்புறக்கணிப்பு

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் இருவார காலம் போராட்டம்

வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகள் முல்லைத்தீவில் இன்று போராட்டம்

மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு சட்டத்தரணிகள் ஆதரவு

விரிவு:- பக் - 11 இல்

## பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக நேற்று மீட்பு!

முல்லை., ஒக். 3
முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் தமிழ்ப் பொலிஸ் அலுவலர் ஒருவர் நேற்று மாலை »11

## மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் நாளை அணிதிரளுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3
பேரினவாத ஆக்கிரமிப்புகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் அராஜகத்துக்கும் எதிரான எமது மக்களின் எதிர்ப்பியக்கத்தின் முதற்கட்டமாக, நாளை புதன்கிழமை காலை 9 மணி அளவில் மருதனார் மடத்தில் ஆரம்பித்து யாழ். நகர் வரையில், காங்கேசன்துறை »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி



## நீதித்துறையின் சுயாதீனத்துக்காக கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம்

### ஐ.நா. பொதுச் செயலருக்கான மனுவும் கையளிப்பு

கிளிநொச்சி, ஒக். 3
நீதித்துறை மீது பிரயோகிக்கப்படும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச்சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் »11

## வாகன வரிப்பத்திரத்தை வீட்டிலிருந்தே பெறலாம்

கொழும்பு, ஒக். 3
அனைத்து வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களையும் விநியோகிக்கும் புதிய கட்டமைப்பு »11

நீதிபதி விவகாரத்தில் தலையிடக்கோரி

## பிரதம நீதியரசரைச் சந்தித்த சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஒக். 3
முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவத்தில், உரிய விசாரணை மேற்கொள்ளும்படி பிரதம நீதியரசரை நேற்றுக்காலை சந்தித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. »10

## எரிபொருள் விலை அதிகரிப்பு பேருந்துக் கட்டணம் உயரலாம்?

கொழும்பு, ஒக். 3
பேருந்துக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
பேருந்துக் கட்டணம் குறைந்தபட்சம் 5 வீதத்தால் அதிகரிக்கப்படவேண்டுமென பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார். »11

## போதைப்பொருள் சந்தேகநபரான அம்புலன்ஸ் சாரதி பணிநீக்கம்

மன்னார், ஒக். 3
உயிர்கொல்லி ஐஸ் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் முருங்கன் மருத்துவமனையின் அம்புலன்ஸ்சாரதி உடனடியாக பணி நீக்கப்பட்டுள்ளாரென மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன் தெரிவித்துள்ளார்.
முருங்கன் ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் வங்காலையைச் சேர்ந்த சாரதியும், வவுனியா மருத்துவமனையில் பணியாற்றும் »11

## பச்சிளங் குழந்தையின் தாய் தவறான முடிவு எடுத்துச் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 3
குழந்தை பிறந்து 20 நாள்களே ஆகியுள்ள நிலையில் அதன் தாய் தவறான முடிவு எடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைச் சேர்ந்த 40 வயதான பெண்ணுக்கு திருமணமாகி 7 »10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். நிபந்தனைகளால் நாட்டின் அமைதி குலையும்!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 3**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் சமூகக் கட்டமைப்பில் அமைதியின்மை நிலவும். நாணய நிதியத்துடனான விவகாரத்தில் அரசாங்கம் தன்னிச்சையாக எடுத்த தீர்மானங்களால் இன்று ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மறுசீரமைக்கப்படவேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சிறுவர்களின் நலன் பேணுவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் நாட்டில் 52 சதவீதமான சிறுவர்கள் ஊட்டச் சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மந்தபோசணையால் சிறுவர்கள் பாதிக்கப்படும்போது எதிர்காலத் தலைமுறை நலிவுற்றதாகவே அமையும்.

பொருளாதாரப்பாதிப்பால் நடுத்தரக் குடும்பங்களின் சுகாதார நிலை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகரசபை முன்னெடுத்த ஆய்வுக்கு அமைய மந்த ஊட்டச்சத்துக் குறைவாக உள்ள நகரங்களின் பட்டியலில் கொழும்பு நகரம் முன்னிலையில் உள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு சர்வதேச நாணயநிதியமே இறுதித்தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு அரசாங்கம் எடுத்த தீர்மானங்களால் ஒட்டுமொத்த மக்களும் இன்று பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாணய நிதியம் முன்வைத்த சகல தீர்மானங்களையும் கண்மூடிக்கொண்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டதன் விளைவை இன்று மக்கள் எதிர்கொண்டுள்ளார்கள்.

நாணயநிதியத்தின் வலியுறுத்தலுக்கு அமைய மின்சாரக் கட்டணம் மீண்டும் உயர்வடையவுள்ளது. நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் சமூகக் கட்டமைப்பில் அமைதியின்மையே தோற்றம் பெறும். ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் குறித்து எதிர்த்தரப்புடன் அரசாங்கம் பேச்சில் ஈடுபடவில்லை.

ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப் படுத்தவில்லை என சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தினால் மக்கள் போராட்டம் தோற்றம் பெறும். அது முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும் - என்றார். (எ-இ)

# ரயில் மோதி மாடுகள் பலி

பளை, ஒக். 3

தண்டவாளத்தில் படுத்திருந்த ஐந்து மாடுகள் ரயில் மோதிச் சாவடைந்தன.

பளை, இத்தாவில் பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ரயிலுடன் மோதுண்டு மாடுகளும், யானைகளும் உயிரிழக்கும் சம்பவங்கள் அண்மைக்காலமாக வடக்கில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ரயில்வே திணைக்களம் தொடர்ந்தும் நட்டத்தில்!

கொழும்பு, ஒக். 3

இலங்கை ரயில்வே திணைக்களம் கடந்த எட்டு வருடங்களில் 297.64 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளபோதும், 52.19 பில்லியன் ரூபா வருமானமே ஈட்டியுள்ளது என்று அதன் உயர் அதிகாரி ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு 245.45 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு ரயில்வே திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட மொத்தச் செலவினம் 40.41 பில்லியன் ரூபாவாகும்.

2022ஆம் ஆண்டில் இலங்கை ரயில்வே திணைக்களத்தின் செலவினம் 42.53 பில்லியன் ரூபாவாகும். ஒரு வருட காலப்பகுதிக்குள் 2.12 பில்லியன் ரூபா செலவினம் அதிகரித்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த எட்டு ஆண்டுகளில் இலங்கை ரயில்வே திணைக்களத்துக்குக் கிடைத்த வருமானத்துடன் ஒப்பிடும்போது, மொத்தச் செலவினமானது வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்: பல தரப்பினர்களும் அதிருப்தி!

இலங்கையின் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பாகப் பல தரப்பினரும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஆசிய இணையக் கூட்டமைப்பு தெரிவித்ததாவது:

ஆசிய இணையக் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் இணையப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குகின்ற அதேவேளை அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும், திறந்த உரையாடல் மூலம் டிஜிற்றல் பொருளாதாரத்தின் சக்தியை பாதுகாப்பதற்கும் இடையில் சமநிலை காண வேண்டும் என்பதைக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. நியாயமான சர்வதேச நடைமுறைகளுடன் இணைந்த ஒழுங்குபடுத்தல்களை உருவாக்குவதற்காக அரசாங்கம் தொழில்துறையைச் சேர்ந்தவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

# ஜனாதிபதித் தேர்தலில் சிறு கட்சிகளும் கவனம்

கொழும்பு, ஒக். 3

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்காக பிரதான கட்சிகள் தற்போதிருந்தே தயாராகிவரும் நிலையில், சிறு கட்சிகளும் அந்தத் தேர்தல் தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகின்றன.

மறுபுறத்தில் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் உள்ளன.

சரத் பொன்சேகா, சரத் வீரசேகர, அமைச்சர் ரொசான் ரணசிங்க ஆகியோரும் தற்போது அந்தப் பட்டியலில் இணைந்துள்ளனர்.

சிங்களத் தேசியவாத அமைப்புகளை ஒன்றுதிரட்டும் முயற்சியில் சரத்வீரசேகர ஈடுபட்டு வருகின்றார். மக்கள் மற்றும் போராட்டக்காரர்களின் ஆதரவைப் பெற்ற அரசியல்வாதியாக பொன்சேகா இருக்கின்றார். (எ-44)

# விமானநிலையங்களில் குற்றவாளிகளுக்குப் பொறி

## மீண்டும் திட்டம் நடைமுறை

கொழும்பு, ஒக்.3

விமானநிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் குற்றவாளிகளை பொறிவைக்கும் வகையில் கடந்தவாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதிகள், புலனாய்வு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் கடந்த 19 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட சில மணித்தியாலங்களில் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# சமூக ஊடகங்கள் மூலம் கடன்: பாதிக்கப்பட்டோர் முறைப்பாடு

கொழும்பு, ஒக்.3

சமூக ஊடக வலையமைப்புகள் மற்றும் இணையத்தள முறைகள் மூலம் அதிக வட்டிக்கு எவ்வித சட்டக் கட்டமைப்பும் இன்றி பணம் வழங்கும் நிறுவனங்களால் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று இணையத்தள நிதி மோசடிகளால் பாதிக்கப்பட்டவர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையில், சமூக ஊடகங்கள் மூலம் உடனடியாகக் கடன் வழங்கும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாகத் தற்போது பேசப்படுகிறது. இவ்வாறான நிறுவனங்களில் கடன்பெற்ற சிலர் தாம் எதிர்கொண்ட அசௌகரியங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதிக்கு உயிரச்சுறுத்தல்

# விசாரணைகளை நடத்த சி.ஐ.டி.யினருக்கு உத்தரவு



கொழும்பு, ஒக். 3

**மு**ல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் தீர்ப்பை மாற்றுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமை ஆகிய விடயங்களில் விரிவான விசாரணைகளை நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் திரன் அலஸ் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

செப்ரெம்பர் 23ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா நீதிபதி பதவியில் இருந்து விலகியதுடன் நாட்டை விட்டும் வெளியேறினார். தனக்கு பொலிஸ் பாதுகாப்புக் குறைக்கப்பட்டு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்றும், புலனாய்வாளர்கள் தன்னைக் கண்காணித்தனர் என்னும், தீர்ப்பை மாற்றுமாறு அரசாங்கத்தால் அழுத்தம் வழங்கப்பட்டது என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார். நீதிபதிக்கு நேர்ந்த இந்த நிலை தொடர்பில் அரசாங்கத்துக்கு நாளுக்கு நாள் அழுத்தம் அதிகரித்துவரும் நிலையிலேயே இந்த விடயத்தில் விரிவான விசாரணையை நடத்துமாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-26)

நீதிபதி மீதான அச்சுறுத்தல்

# ஒட்டுமொத்த நீதிக்கும் விழுந்த பெரும் அடி!

## விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 3

அச்சுறுத்தல் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி பதவி விலகியுள்ள விடயம் பாரதூரமான விடயமாகும். இது தனிநபர் ஒருவருக்கு எதிரான அச்சுறுத்தல் அல்ல, மாறாக ஒட்டு மொத்த நீதித்துறைக்கும் விழுந்த அடியாகும் என்று வலியுறுத்தியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு என்பவற்றை அரசு உடனடியாக மீளப்பெறவேண்டும். நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அச்சுறுத்தல் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி பதவி விலகியுள்ள விடயம் பாரதூரமான விடயமாகும். இது தனிநபர் ஒருவருக்கு எதிரான அச்சுறுத்தல் அல்ல, மாறாக ஒட்டுமொத்த நீதித்துறைக்கும் விழுந்த அடியாகும். மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, அந்த அச்சுறுத்தலை விடுத்தது யார்? என்பது உள்ளிட்ட உண்மை நிலை கண்டறியப்பட்டு, நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஏனைய நீதிபதிகளும் தற்துணிவுடன் செயற்படும் தமது பணியை முன்னெடுக்க நம்பிக்கை வரும். நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களை அச்சுறுத்தல்மூலம் ஒடுக்க முற்படும் அரசின் முயற்சிகளை நாம் தோற்கடிப்போம். எனவே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு என்பன மீளப்பெறப்பட வேண்டும் - என்றார். (எ-44)

# கத்தி முனையில் கொள்ளை இரண்டு பேர் மடக்கிப்பிடிப்பு!

முல்லைத்தீவு, ஒக். 3

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுதந்திரபுரம் கிராமத்தில் கத்திமுனையில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுதந்திரபுரம் பகுதியில் சிறு கடை ஒன்றை வைத்திருந்து வாழ்வாதாரம் மேற்கொண்டு வரும் பெண் ஒருவரின் கடைக்குச் சென்ற இரண்டு கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி பணத்தைக் கொள்ளையிட முயன்றபோது கிராம மக்கள் ஒன்றுகூடி அவர்களை மடக்கிப் பிடித்தனர். அவர்கள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம-19)




# புதினம் தெரியுமோ?

**நா**ணி நடந்தாலும் நாய்க்குணம் மாறாது கண்டியளோ. அதைமாதிரித்தான் நாய்மாதிரி குலைச்சுக் கொண்டு திரிஞ்ச சரத் வீரசேகர, இப்ப கொஞ்சநாளா பம்மினபடி திரியிறார். எண்டாலும் உள்ளுக்க அதே பழைய நாய்க்குணம் இருக்கத்தான் செய்யுது. நீதிபதி சரவணராஜா தனக்கு உயிர் அச்சுறுத்தல் எண்டு சொல்லி வெளிநாட்டுக்குத் தப்பிப் போனதுக்கு மூலகாரணமே சரத் வீரசேகர எண்டு எல்லா இடமும் கதை பரவிட்டுது. 'ஒரு நீதிபதியே தனக்கு பாதுகாப்பு இல்லை எண்டு வெளியேறிற அளவுக்குத்தான் இப்பத்தை ஆட்சி இருக்குது' எண்டு எதிர்க்கட்சியளும், சர்வதேசமும் இலங்கையைக் காறித்துப்பத் தொடங்கிட்டினம். அதவிட சிங்களச் சனமும் முதலில சரத்வீரசேகர ஊதின 'தமிழ் நீதிபதி' எண்ட இனவாத மகுடியில மயங்கிப்போய்க் கிடந்தாலும், ஒரு நீதிபதியைக் கலைக்கிற அளவுக்கு வீரசேகர வித்தையைக் காட்டியிருக்கிறார் எண்டதால, நாளைக்கு இதேநிலைமை தங்களுக்கும் வரக்கூடுமோ எண்ட பயத்தில, வீரசேகரவுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான மனநிலையிலதான் இருக்கினமாம்.

நீதிபதி நாட்டை விட்டுப் போட்டார் எண்டவுடனேயே, தன்ர கூட்டாளிமாருக்கு தண்ணிப்பார்ட்டி வைச்சுக் கொண்டாடியிருக்கிறார் வீரசேகர. 'எப்பிடி என்ர பவர். ஒரு நீதிபதியையே ஓட வைச்சிட்டன்' எண்டு அந்தப் பார்ட்டிக்கு வந்தவைக்கு விலாசமும் காட்டியிருக்கிறார். இப்பிடி அவர் தன்ர வீரதீரப் பிரதாபங்களையெல்லாம் அங்க உளறிக்கொட்டினதை மேலிடத்துக்கு ஆரோ போட்டுக்குடுத்திட்டினமாம். 'இந்த விசயத்தில கண்டபடி கதைச்சால் ஜெயிலுக்குத்தான் போகவேண்டிவரும். பொத்திக்கொண்டிரு' எண்டு 'கட்டன்ரைட்டா' சொல்லுப்பட்டதாலதான், 'நான் ஒரு அச்சுறுத்தலும் குடுக்கேலை. இப்பிடி நீதிபதி அபாண்டமாப் பழி போட்டிட்டு போனது இலங்கைக்கே அடுக்காது' எண்டு மாய்மாலம் காட்டுறார். ஆனால் அவர் சொல்லுறதை ஆரும் நம்ப மாட்டினம் எண்டு அவருக்கும் தெரியும்.

அதைவிட அரசாங்கம் வீரசேகரவில பழிவிழாமல் இருக்க நீதிபதியின்ர தனிப்பட்ட வாழ்க்கையையும் இதுக்க இழுக்கப்பாக்குது. 'அவருக்கும் மனுசிக்கும் சண்டை, அவாவுக்கே சொல்லாமல் தான் நாட்டை விட்டுப் போனவர், காரை ஒரு கிழமைக்கு முதல் தான் வித்தவர், வெளிநாட்டு எம்பஸிக்காரரைச் சந்திச்சவர், எங்கட புலனாய்வுக்காரர் அவரைக் கண்காணிக்கேலை' எண்டு அமைச்சர்மார் அறிக்கை விடுகினம். ஆனால் நீதிபதி செய்த இவ்வளவு காரியமும் அரசாங்கத்துக்கு எப்பிடித் தெரிய வந்திச்சாம்? அவரை அந்தளவுக்கு புலனாய்வுக்காரர் கண்காணிச்சதாலைதானே அவர் மூச்சு விட்டதைக் கூட சொல்லமுடியுது. மண்டைக்கு மேல இருக்கிற கொண்டையை மறந்திட்டு இப்பிடியெல்லாம் உளறி, தங்களைத்தாங்களேயெல்லோ காட்டிக்குடுக்கினம்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நடனப் போட்டி: தென்மராட்சி முதலிடம்



யாழ்ப்பாணம், ஒக். 3

தேசியமட்ட நடனப் போட்டியில் தென்மராட்சி மாணவிகள் முதலிடம் பிடித்துள்ளனர்.

'பிரதீபா -2023' தேசிய நடனப்போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தப் போட்டில் தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தின் சார்பாகப் பங்கேற்றிருந்த மாணவிகள் தில்லானா ஆற்றுகையில் முதலாவது இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். (ச-100)

# கிளி.மத்திய கல்லூரியில் முதியோர்தின நிகழ்வுகள்

கிளிநொச்சி, ஒக். 3

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் முதியோர்தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களிலுள்ள முதியவர்கள் கௌரவிக்கப்பட்டு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து முதியோர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-113)

# கலாசாலை 100

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டையொட்டி கல்லூரித்தின விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கலாசாலையில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் பங்கேற்றார். சிறப்பு விருந்தினர்களாக கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா.கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம், கௌரவ விருந்தினராக நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முதல்வர் சாந்தனி வாகீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் நூறு ஆண்டுகளை வெளிப்படுத்தும் வகையில் நூறு நிறை குடங்கள் தாங்கி, கொடிகள் ஆலவட்டத்துடன் பண்பாட்டுப் பேரணி இடம்பெற்றது.

தொடர்ந்து ரதிலக்சுமி மண்டபத்தில் நூற்றாண்டையொட்டி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. கலாசாலையால் வெளியிடப்படும் நூலான கலாதீபம் நூல் வெளியிடப்பட்டதுடன் நூற்றாண்டுவிழாவின் சிறப்பு நிகழ்வாக கலாசாலையின் ஓய்வுநிலை பிரதி அதிபரான பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய சிறப்பு ஆய்வான 'வடக்கின் ஆசிரியர் கலாசாலை' எனும் நூலும் வெளியிடப்பட்டது. இந்த நூலுக்கான கருத்துரையை கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளரும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலோசகருமான சரா. புவனேஸ்வரன் நிகழ்த்தினார். (ச-27)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்துபோகும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**இடபம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்து போகும். உடல்நலத்தில் கவனம் தேவை. பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசைவாட்டும். உறவினர்களுடன் பகைமை வந்து செல்லும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**கடகம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி:** சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிலவிஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது.

**துலாம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அமைவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**தனுசு:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும்.. தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்:** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். அழகும் இளமையும் கூடும். நவீன மின்னணுச் சாதனங்கள் வாங்குவீர்கள்.



# தென்னாடு இதழ் யாழில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 3

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் 37ஆவது தென்னாடு இதழ் நிறைமதி நாளான கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் தருமை ஆதீன திருச்சி மௌனமடம் மற்றும் திருக்கேதீச்சர மடத் தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய யாழ்.மாவட்ட ரீதியாக முதல்நிலைச் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்களும், பாராட்டுக்களும் வழங்கப்பட்டன. (ம-66)

# கலைவிழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 3

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து நடத்திய கலைவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் ஆலய முன்றிலில் இடம்பெற்றன.

சனசமூக நிலையத் தலைவர் து. சுதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலக காணிப் பதிவகப் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அம்பலம் பாஸ்கரன், குமரன் விளையாட்டுக் கழக கனடாக் கிளையின் முன்னாள் தலைவர் உதயகுமார் சைலயா தம்பதிகள் கலந்து கொண்டனர். (ச-66)



ஐ.ஓ.எம். நிறுவன நிதி உதவியுடன் ஒபர் சிலோன் மற்றும் சி.எப்.சி.டி நிறுவனங்களால் யாழ்.மாவட்டப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் இந்தியாவிலிருந்து மீளத் தாயகம் திரும்பியவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் தொழில் உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டம் கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தியும் பின்னடிக்கும் இலங்கையும்!

தெற்காசியாவில் அதிகளவான மின்கட்டணத்தை வசூலிக்கும் மூன்றாவது நாடாக மாறியிருக்கின்றது இலங்கை. இவ்வாறிருக்கையில் தற்போது மின்சாரசபையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மின்கட்டணத் திட்டத்தை (கட்டண உயர்வை) நடைமுறைப்படுத்தினால் தெற்காசியாவிலேயே அதிக மின்கட்டணத்தை அறவிடும் நாடுகளில் இலங்கை முதலிடத்தைப் பிடிக்கும் என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் எரிசக்தி நிபுணரான திலக் சியம்பலாபிட்டிய.

எரிசக்தி அமைச்சின் நிதித்தளத்தை மறுசீரமைப்புச் செய்யும் ஒரு பகுதியாக, மின்சாரசபையை நிதி இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றும் நோக்கில் கடந்த வருடம் மின்கட்டணங்கள் தாறுமாறாக உயர்த்தப்பட்டன. நாடு சுமுகமடையும் பட்சத்தில் மின்கட்டணக் குறைப்பு நடைமுறைக்கு வரும் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர அந்தக்காலத்தில் தெரிவித்திருந்தபோதிலும், நியாயமான – மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கவல்ல கட்டணக்குறைப்பு இதுவரை சாத்தியமாகவேயில்லை. இவ்வாறிருக்கையில், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல, மீண்டும் ஓர் இமாலய கட்டண உயர்வுக்கான நடவடிக்கைகளையே நாட்டின் வறட்சி நிலையைக் காரணம் காட்டி முன்னெடுத்து வருகின்றது மின்சாரசபை. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதிக்கும் பட்சத்தில் கட்டண உயர்வு மீண்டும் மக்களின் தலையில் இடியாக இறங்கும். இவ்வாறானதொரு பின்னணியில்தான் திலக் சியம்பலாபிட்டிய இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார்.

உலகிலுள்ள பல நாடுகள் இன்று புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக்கு மாறியுள்ளன. அமெரிக்காவில் ஆரம்பித்த 'புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக் கலாசாரம்', பின்னர் ஐரோப்பாவிலும் கனடா, அவுஸ்திரேலியாவிலும் வலுவாக நடைமுறைப்படுத்தப்பட்டு இன்று அரபு நாடுகளாலும் மத்திய கிழக்கு நாடுகளாலும் பின்பற்றத் தலைப்பட்டிருக்கின்றது. மத்திய கிழக்கு நாடுகளிலும் அரபு நாடுகளிலும் அள்ளஅள்ளக் குறையாத கச்சா எண்ணெய் நிறைந்திருக்கையில், அந்த நாடுகளே இன்று 'திரவ எரிசக்தி' கொள்கையை கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட்டு பயணப்படத் தலைப்படுகையில், இலங்கையோ இன்னமும் எரிபொருளில் இயங்கும் அனல்மின் உற்பத்தியையும், நீர்மின் உற்பத்தியையும் மட்டுமே தன் மின்தேவைக்கான பிரதான கட்டமைப்புகளாகக் கொண்டுள்ளமை அபத்தமானது. இந்தப் பிறழ்வான சிந்தனைதான் 'தெற்காசியாவில் அதிக மின்கட்டணத்தை வசூலிக்கும் நாடாக' இலங்கை மாறுவதற்கான ஏதுநிலைகளை ஏற்படுத்தி விட்டிருக்கின்றது. சூரியசக்தி மூலமும், காற்று மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஏதுவான காலநிலையும்,புவியியல் சாதகத் தன்மையும் இலங்கையில் தாராளமாகவுண்டு. இத்தகைய புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்திக்கான செலவும் மிகமிகக் குறைவு. அத்தோடு சூழலுக்கும் பாதகமில்லை. மூலதனச் செலவு மட்டுமே இதற்குத் தேவைப்படும். அதையும் நன்கொடையாக வழங்குவதற்கு சிலநாடுகள் தயாராகவேயுள்ளன. ஆனாலும் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திமுறைமைக்கு மாற இலங்கை பின்னடித்தே வருகின்றது.

'நவீனத்துவம் புகுத்தப்பட்ட' புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திகள் இலங்கைக்கு அவசியமானவை. அதிலும் இலங்கை போன்ற தீவு நாடுகளின் மின்தேவைக்கு இவை தவிர்க்க முடியாதவை. இத்தகைய திட்டங்களை முன்னெடுக்கும்போது, அதுதொடர்பிலான விளக்கங்களை வழங்காமல், 'திடுதிப்பென' திட்டத்தை ஆரம்பித்தால், பொதுமக்கள் குழம்பவே செய்வார்கள். அதுவே யதார்த்தம். ஆனால், நல்லதொரு தெளிவூட்டலை மக்களிடையே ஏற்படுத்தி அபிவிருத்தியை நோக்கிய பயணத்தை உறுதிப்படுத்த வேண்டியதுதான் அரசாங்கத்தின் பிரதான கடமையும் பொறுப்புமாகும்.

புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி என்பது 2030 ஆம் ஆண்டுதான் இலங்கையின் இலக்காக இருக்கின்றது. 70 வீதமான மின்கட்டமைப்பை புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தியை வைத்து இந்தத் தசாப்தத்தின் நிறைவுக்குள் அடைவோம் என்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78 ஆவது அமர்வில் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில். வெறுமனே வாய்ப்பேச்சுடனும் வெற்று வாக்குறுதிகளுடனும் நின்றுவிடாது தன் வார்த்தைக்கும் வாக்குறுதிகளுக்கும் செயல்வடிவம் கொடுக்க ஜனாதிபதி முன்வரவேண்டும். அதுதான் இலங்கையின் எதிர்காலத்துக்கும், பொருளாதாரத்துக்கும் வளமானதாக அமையும்.

## நாளொரு நல்வார்த்தை

பிறவித் திறமையை வளர்ப்பதற்காகவே கல்வியறிவு பயன்படவேண்டும்.

– பிளேட்டோ–




# மின்கட்டணம் அதிகரித்தால் வீதிக்கு இறங்கிப் போராட்டம்

## குணவங்ச தேரர் மிரட்டல்

**கொழும்பு, ஒக். 3**

**மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து வீதிக்கு இறங்குவேன் எனத் தேசிய வளங்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரப் பாதிப்பின் சுமை ஒட்டுமொத்த மக்கள் மீதும் மனச்சாட்சியில்லாத வகையில் திணிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்குச் சாத்தியமான முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. பொருளாதாரப் பாதிப்பினால் நடுத்தர மக்கள் வாழ்வதா? அல்லது இறப்பதா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கடன் பெறுதல், மிகுதியாக உள்ள வளங்களை விற்பனை செய்தல் ஆகியனவே அரசாங்கத்தின் பிரதான பொருளாதாரக் கொள்கையாகக் காணப்படுகின்றன. தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அரசாங்கத்துடன் போராடிக் கொண்டிருக்கிறோம். சர்வதேச நாணய நிதியம் இரண்டாம் தவணைக் கடன் வழங்கலைத் தாமதப்படுத்தியதைத் தொடர்ந்து மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபடுவேன் - என்றார். (ம)

# மின்கட்டண அதிகரிப்புக்காக தரவைச் சமர்ப்பிக்கும் மி.சபை!

## எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கான கோரிக்கை தொடர்பான நியாயப்பாடுகள் மற்றும் தரவுகளைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க இலங்கை மின்சாரசபை தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக அனல் மின் உற்பத்திக்கான செலவுகளை ஈடுசெய்யும் வகையில் மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று மின்சாரசபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வழமையான கட்டணத் திருத்தத்துக்கு மாறான கட்டண அதிகரிப்பு என்பதால் இந்த விடயம் தொடர்பான விரிவான தகவல்கள் எதிர்வரும் இரண்டு நாள்களில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை** 04.10.2023 புதன்கிழமை புரட்டாதி 17

சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி வளலாய் அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் பொருளாதார நலிவுற்ற 36 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பூமணி அம்மா அறக்கட்டளையால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ய-66)



ஊர்காவற்றுறையில் ஆரோக்கிய அன்னையின் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெற்றது. (ய-100)



ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவியும் ஆசிரியர் பாலினி கண்ணதாசனின் மாணவியு மான அபிநயா ரஜீபனின் பரதநாட்டிய அரங்கேற்றம் யாழ்ப்பாண கலாசார மண்ட பத்தில் வாழ்நாள் பேராசிரி யர் அ.சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண் முகதாஸ் இணைத் தலைமை யில் அண்மையில் வெகுவி மரிசையாக நடைபெற்றது. (ய-214)

## கேள்வி அறிவித்தல்.
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சபை நிதி 2023

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்.** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 11.01.2021 ம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவரும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர். பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர் தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள லாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2023.10.03 ஆம் திகதியில் இருந்து 2023.10.17 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர். பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்** அவர்களிடமிருந்து 2023.10.03 ஆம் திகதியிலிருந்து 2023.10.17 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு . வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2023.10.18 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி. கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம். கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2023.10.11 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/PVI/2023/01 | மாணிக்க இடைக்காடர் வீதி – அச்சுவேலி | 3.73 | 90 நாட்கள் | C7,C8 அல்லது C9 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 38,000.00 | 17.01.2024 |
| NP/14/41(13)/2/Council/PVI/2023/02 | வீரவாணி வீதி 1 ம் ஒழுங்கை வாதரவத்தை | 2.47 | 90 நாட்கள் | C7,C8 அல்லது C9 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 25,000.00 | 17.01.2024 |
| NP/14/4(131)/2/Council/PVI/2023/03 | சிவன் வீதி 1 ம் ஒழுங்கை புத்தூர் | 2.49 | 90 நாட்கள் | C7,C8 அல்லது C9 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 25,000.00 | 17.01.2024 |
| NP/14/41(13)/2/Council/PVI/2023/04 | வீரவாணி வைரவர் கோவில் முன் ஒழுங்கை வாதரவத்தை | 2.27 | 90 நாட்கள் | C7,C8 அல்லது C9 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 23,000.00 | 17.01.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர்.**
**2023.10.03**

(cr 40692) (N-1)



மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தால் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு வலி. தென்மேற்கு பிரதேசசபையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-125)



## சான்றிதழ் வழங்கல்

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேசெயலர் பிரிவில் தொழிற்பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை உத்தியோகத்தர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ய-27)


### மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
மாபிள் பதித்து தரப்படும்.
**இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபா**
077 334 1281


### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
### 2023, 2024 மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு
### திருத்த வேலைகளுக்கான கேள்வி கோரல்

2023.10.02 ஆம் திகதிய பத்திரிகையில் கேள்வி கோரல் விளம்பரத்தில் தவறுதலாக கிடைக்கப்பெறும் கேள்வி கோரல் 2023.10.08 ஆம் திகதி பிற்பகல் 2.10 மணிக்கு திறக்கப்படும் 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்த கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெறும் கேள்வி கோரல் 2023.10.09 ஆம் திகதி பிற்பகல் 2.10 மணிக்கு திறக்கப்படும் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்த கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என திருத்தி வாசிக்கவும்.

**ப.க. பரமலிங்கம்**
**தலைவர்,**
**அறங்காவலர் சபை.**

**ந.மோகனரூபன்**
**செயலாளர்,**
**அறங்காவலர்**

(cs.20280) (N.1)

## துயர்பகிர்கிறோம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி சு.சுரேகா
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி சகுந்தலாதேவி தங்கவேல்**
அவர்கள் நேற்றுமுன்தினம் (01.10.2023)
ஞாயிற்றுக்கிழமை இறைபதம்
அடைத்தமையையிட்டு பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(cs.52262) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் • 05 • 01 • 1942



மறைவு • 30 • 09 • 2023

## இளையதம்பி கந்தசாமி

அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் தலையாளியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தசாமி அவர்கள் கடந்த (30.09.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், நிமலமோகன் (இத்தாலி), காலஞ்சென்ற நிமலநாதன், நிமலசோதி (கொக்குவில்), நிமலதேவி (கொக்குவில்), நிமலவதனி (சுவிஸ்), நிமலறஞ்சி (லண்டன்), நிமலசெல்வி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்கவாசகர், சிறிஸ்கந்தராசா, ஆணந்தராசா, ஸ்ரீதர், நிஷாந்தகுமார், பேபி ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்லம்மா (லண்டன்), இராசம்மா (லண்டன்), காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கனகரத்தினம் மற்றும் தர்மலிங்கம் (கனடா), தியாகராசா (கிளி- முடமாவடி துஷ்யந்தன் களஞ்சியம்), இராசேந்திரம் (ராசா), வேலாயுதபிள்ளை (சிவம் - கொழும்பு), சுந்தரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் வாரித்தம்பி, காலஞ்சென்ற தம்பிமுத்து, ஆணந்தலெட்சுமி (கிளி), சரஸ்வதி, சரோஜாதேவி, தவமலர், முத்துலட்சுமி, புனிதமலர், சறோஜாதேவி ஆகியோரின் மைத்துனரும், நிருசன், நிவேதன், லஜீவன், லக்ஷாயினி, வஜிகரன், நர்த்தனா, திவ்வியா, பேபிஷா, அக்ஷயா, வேணுஜா, விஷ்னுயா, லானுஜா, அபிஷா, திஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2023) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது கொக்குவில் தலையாளி இல்லத்தில் நடைபெற்று, பின் அவரது பிறப்பிடமான புலோப்பளை, பளையில் உள்ள அவரது மருமகன் சிறிகந்தராசா அவர்களது இல்லத்தில் அஞ்சலிக்காக பி.ப 1.00 மணியளவில் வைக்கப்பட்டு பின் புலோப்பளை பொற்பத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

**சிறி- 0777 177 305 (மருமகன்)**
**ராசு - 0774 124 430 (சகோதரர்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 52355) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி பேராயிரம் இராசலட்சுமி
(பேராயிரம் ரீச்சர்)

எமது அன்புத் தாயார் பேராயிரம் இராசலட்சுமி அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி ஊடாகவும், இணையம் வாயிலாகவும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைவருக்கும், இறுதிக்கிரியையின்போது அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தி யேட்டிக் கிரியையும், மதிய போசனமும் நாளை (04.10.2023) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

அனைவரையும் இவ்வழைப்பை சூழ்நிலை கருதி நேரடி அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.33, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை.**
**074 313 1516**

**குடும்பத்தினர்.**

(CS 26433) A-1

## பெயர் மாற்றம்

கள்ளிப்பிட்டி, கண்டாவளை பரந்தனில் வசிக்கும் **விஜயகுமார் திலக்சிகா** ஆகிய நான் எனது முதற் பெயரினை இன்று முதல் **விசயகுமாரன் திலக்சிகா** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**விசயகுமாரன் திலக்சிகா**

(Nell) (N.1)

## விதைநெல் விற்பனைக்கு

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிவிளைச்சலைக் கொண்ட B. G.34.6 இன மூன்றரை மாத விதைநெல் விற்பனைக்குண்டு.

**077 659 2044**

(cr.40680) (N-1)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
## உற்பத்திமுகாமையாளர் பதவி

எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலைநாட்களில் ரூபா 20/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 13.10.2023 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக '**தலைவர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்**' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதவி : உற்பத்திமுகாமையாளர் (ஒப்பந்தம்)**
**சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தகைமைகள்:**

(1) பல்கலைக்கழகத்தில் உணவு விஞ்ஞானமும் போசணையும் (Food Science and Nutrition) பட்டப்படிப்பு பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் வெலிசறை / குண்டகசாலை இரண்டு வருட டிப்பிளோமா பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(2) ஆங்கிலத்தில் தேர்ச்சி (எழுத, வாசிக்க) பெற்றிருத்தல் மற்றும் சிங்களம் பேசத் தெரிந்திருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) கணினி அறிவுடையவராயிருத்தல் விரும்பத்தக்கது.

**பொது நிபந்தனைகள்:**

1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப் பங்களும் சரிவரப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக் கப்படும்.

**தலைவர்,**
**03.10.2023**

(cr.40693) (N.1)

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 21 • 09 • 1983



**மறைவு** 02 • 10 • 2023

### திருமதி கிருஷ்ணபவானி கங்கைகுமரன்

ஆட்டுப்பட்டித்தெரு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் இல. 211/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபவானி கங்கைகுமரன் அவர்கள் நேற்று (02.10.2023) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்

அன்னார் தேவசிகாமணி வள்ளியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் கங்கைகுமரன் (அப்பன்) அவர்களின் அன்பு மனைவியும் டியானின் அன்புத்தாயாரும் தேவராஜா நாகரத்தினத்தின் அன்பு மருமகளும் ரவிச்சந்திரன், இராமகிருஷ்ணன், ஸ்ரீநிவாசன், மணித்வீவவாசினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கருணாகரன், பிரபாகரன், யசோதா, அனுஷா, சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.10.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
**கங்கைகுமரன்**
**(அப்பன் - கரன்)**

**077 0581 306**
**077 4046 870**

(CS 28431) M-1

## மரண அறிவித்தல்



### திருமதி சத்தியானந்தன் தர்னலதா

**(ஓய்வுநிலை ஆசிரியர் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)**

யாழ்ப்பாணம் கலட்டியை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியானந்தன் தர்னலதா நேற்று (02.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (சக்கறை) சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (அப்பாத்துரை) இராஜேஸ்வரி (ராசாத்தி) தம்பதியரின் அன்பு மருமகளும் மற்றும் சத்தியானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், பிரேமலதா, செல்வலதா, விஜயகுமாரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2023) செவ்வாய்க் கிழமை மு.ப. 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக் காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில் (உப்பு மடம்).**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 52359) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 14 |
| 04 | 10 |
| 1941 | 2022 |

## அமரர் வேலுப்பிள்ளை கனகலிங்கம்

திதி: தேய்பிறை பஞ்சமி

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

நினைவுகளுடன்
அன்பு மகன் - கபிலானந்தன் (கனடா),
அன்பு மனைவி, மகள், மகன்கள்.

ஆ, சங்கியன் வீதி,
நல்லூர்



## புவேந்தன் முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வுகள்!

சாவகச்சேரி நகர் புவேந்தன் முன்பள்ளியின் சர்வதேச சிறுவர்தினம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளியின் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் பா.ஜெயந்தன், புவேந்தன் முன்பள்ளியின் நிறுவுனர் திருமதி சரஸ்வதி மகாலிங்கம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. அத்துடன், முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

(ம-159)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1992 | 2023 |
| 04 | 08 |
| 23 | 20 |

## திரு.S.B.மனோஜ் குமார்
(MANOJ / BENSON)

நிழல் போல் இருந்தவன் நீ
நினைவாய் மாறினாய்....!
கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர் துளியாகினாய்
நீ பிரிந்தது எங்கள் கண்களை விட்டுதான்
இதயத்தை விட்டு அல்ல...
நண்பா உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

தகவல் - Darbar Restaurant மற்றும் நண்பர்கள்

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 | 01 |
| 11 | 10 |
| 1982 | 2023 |

## பரமநாதன் யோதீஸ்வரன்
(குட்டித்தம்பி ஜோதி)

(ஜோதி விருந்தினர் விடுதி உரிமையாளர் - தபால்கந்தோர் வீதி, சாவகச்சேரி)

தம்பகாமம் பளையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் யோதீஸ்வரன் (குட்டித்தம்பி ஜோதி) 01.10.2023 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதன் அருந்தவமலர் தம்பதியினரின் அன்பு மகனும் கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் காலஞ்சென்ற குகதீஸ்வரன் மற்றும் சிவதீஸ்வரன், சாரதா, காலஞ்சென்ற வாசுகி, சதீஸ்வரன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நந்தினி, பவானி, கீதா, நந்தன், ஞானம் ஆகியோரின் மைத்துனரும் தேன்னிலா, மதிநிலா, கஜநிலவன், கபிஷன், நிதர்சனா, கீர்த்தனன், தனோஜனன், டனுஜனன் ஆகியோரின் சித்தப்பாவும் கோபிகன், யாழிசை, கஜீபன், பிரவீனா ஆகியோரின் மாமாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.10.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தம்பகாமம் மலையான்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்
077 0371 660

தம்பகாமம்,
பளை.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 01 |
| 12 | 10 |
| 1944 | 2023 |

## திரு.சிதம்பரப்பிள்ளை சற்குணநாதன்

இடைக்காட்டினை பிறப்பிடமாகவும் உடுவில் ஆர்க்லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிதம்பரப்பிள்ளை சற்குணநாதன் கடந்த (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுகந்தி (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, சற்குணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (ஆசிரியர்) - தவமணி (ஆசிரியை) தம்பதியரின் அன்பு மருமகனும், குணஉதயன், குணபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்ஷிகா, குயின்டாவின் மாமனாரும், ஜேடனின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பாலசிதம்பரநேசன், சுகுணராணி, ஜெயச்சந்திரா, சந்திரகாந்தலீலா, சந்திரவதனா, சந்திரலோசனா, ஜெயச்சந்திரன், கிருபாமலர், தேவமலர் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தவமலர், கிருபாமலர், வனிதாமலர், சாந்தகுமார், லலிதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (03.10.2023) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு உடுவில் ஆர்க் லேனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் அக்கராயன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


தகவல்:
குடும்பத்தினர்.

ஆர்க் லேன், உடுவில்.

(CS 26434) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்குமாறு கையெழுத்து



கிளிநொச்சி, ஒக். 3

நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க அணிதிரள்வோம் என்னும் தொனிப்பொருளில் கையெழுத்துப் போராட்டமொன்று கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி சேவைச்சந்தை மற்றும் இதர பகுதிகளில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கும், நீதிபதியின் தீர்ப்பை மாற்றுமாறு வலியுறுத்துமாறு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் நாட்டின் நீதிக்கட்டமைப்பு சீரழிந்து வருகின்றது. பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கையெழுத்துப் போராட்டத்தில் கலந்துகொண்ட பலரும் வலியுறுத்தினர். (ம-113)



## வட்டுக்கோட்டையில் பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

'சித்தங்கேணி ஒன்றியத்தின்' அனுசரணையில் சித்தங்கேணி ஆன்மிக அறக்கட்டளை இணைந்து நடத்திய பரிசளிப்பு நிகழ்வு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சித்தங்கேணி ஆன்மிக அறக்கட்டளையின் தலைவர் சிற்றம்பலம் ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் ப.பார்த்தீபன், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் நொபேட் உதயகுமார், ஓய்வு பெற்ற ஆசிரியர் சிவமலர் சுந்தரபாரதி, வட்டு. இந்துக் கல்லூரியின் ஆசிரியர் பரமானந்தர் மதனகோபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)

# தேர்தல் ஆணைக்குழுவினரை நீதிமன்றில் தோன்றப் பணிப்பு

தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு மீண்டும் கட்டளை அனுப்புமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலை மார்ச் 9ஆம் திகதி நடத்தத் தவறியதன் மூலம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடக் கோரிய மனுக்களை ஐந்து பேர் கொண்ட உச்சநீதிமன்ற நீதியரசர்கள் குழாம் விசாரணை நடத்திய பின்னரே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (அ-ஒ-இ)

# ரூபா வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 3

அமெரிக்கா டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்றும் வீழ்ச்சியைச் சந்தித்தது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 318.27 ரூபாவாகவும் விற்பனை விலை 329.01 ரூபாவாகவும் நேற்றுப் பதிவானது. (ம)

# பொதுக் குழாய்க்கிணறு மக்களிடம் கையளிப்பு

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைப்பால் ஆலயத்துக்கு அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் சி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் உள்ள முல்லைக்குமரன் ஆலயத்துக்கு 2.5 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு பொதுமக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சி.சிவமோகன், சாந்திசிறீஸ்கந்தராசா, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன் சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் விளையாட்டுக் கழகம் ஒன்றுக்கு வலைப்பந்தும் வழங்கப்பட்டது. (எ-19)

### பிரதம...

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவை, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன, உபதலைவர் நலிந்த இந்ததிஸ்ஸ, யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தவபாலன் ஆகியோர் சந்தித்து உரிய நடவடிக்கையெடுக்க வலியுறுத்தினர். இந்த விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கையெடுப்பதாக பிரதம நீதியரசர் தெரிவித்தார். அத்துடன், முல்லைத்தீவு நீதிமன்றத்தின் பதில் நீதிபதியை, நீதிபதியாக அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### பச்சிளங்...

ஆண்டுகளின் பின்னரே குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தை பிறந்து 20 நாள்கள் கடந்துள்ள நிலையில், தாய்ப்பால் சுரக்கவில்லை என்ற மன அழுத்தத்தில் குறித்த பெண் இருந்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையிலேயே அவர் நேற்று தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி [illegible] ரலா மேற்கொண்டார். [illegible]


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02.04.1943

மறைவு 14.10.2022

கடந்த 14.10.2022 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத்தெய்வம்

**அமரர் அப்பையா தம்பித்துரை**

அவர்களின் ஓராண்டு நினைவு தினம் இன்று (03.10.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
077 783 9699

டச்சு வீதி,
[illegible] தெற்கு,
கோப்பாய்.

(CS 52326) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீதிமன்ற...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் முடக்கப்படவுள்ளன. சட்டத்தரணிகள் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளைப் புறக்கணிக்கவுள்ளனர். இதேவேளை - முல்லைத்தீவில் இன்றையதினம் மிகப்பெரிய கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தப்படவுள்ளது.

குருந்தூர்மலை விவகாரம் உட்பட பல்வேறு வழக்குகளில் தீர்ப்பு வழங்கிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா கடந்த 23ஆம் திகதி உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி துறந்தார். அவர் வெளிநாடு ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளார். நீதித்துறையின் மீதான அச்சுறுத்தலுக்கு எதிராக நாடு முழுவதிலும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

முல்லைத்தீவு நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் அனைவரும் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகாமல் தொடர்ச்சியாக நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணிக்கவுள்ளனர். அத்துடன் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகளுடன் இணைந்து மாபெரும் கவனவீர்ப்பையும் முன்னெடுக்கவுள்ளனர்.

இதேவேளை - யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா தொடர்பிலும், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி சட்டவாட்சியை நிலைநாட்டவும் ஏதுவாக எதிர்வரும் இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது எனத் தீர்மானித்துள்ளனர்.

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தால் எடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பில் இன்று இணைவதுடன் யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் முல்லைத்தீவு சென்று நீதிமன்றத்தின் முன்னால் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

நீதித்துறைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலைக் கண்டித்து அடுத்து வரும் இரண்டு வாரங்கள் கறுப்பு நிறத்திலான முகக்கவசங்களை அணிந்து கடமையில் ஈடுபடுவார்கள்.

தமிழ்க் கட்சிகளால் மருதனார்மடம் முதல் யாழ்ப்பாணம் வரை நீதிபதிக்கு எதிரான அச்சுறுத்தல்களைக் கண்டித்து நாளை நடத்த இருக்கும் மனிதச் சங்கிலி போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதுடன் அதில் அனைத்து சட்டத்தரணிகளும் பங்கு கொள்வார்கள்.

இன்றும், நாளையும் சட்டத்தரணிகள் வடமாகாண நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிப்பதுடன் இது தொடர்பில் எடுக்கப்படவேண்டிய மேலதிக நடவடிக்கை தொடர்பான விசேட பொதுக்கூட்டத்தை நாளை நடத்தவுள்ளனர்.

'மதிப்புக்குரிய நீதிபதிக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் பாரபட்சமற்ற சுயாதீன விசாரணை செய்யப்படவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் நீதித்துறையின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்' போன்ற முக்கியமான தீர்மானங்களையும் சட்டத்தரணிகள் எடுத்துள்ளனர்.

(அ-ஒ-19-26)

### மனிதச்...

வீதி வழியாக, மாபெரும் மனிதச் சங்கிலியாக கைகோர்த்து, நீதி கோரி திரண்டு வாருங்கள் எனத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் உரிமையுடன் அழைப்பு விடுத்துள்ளன.

இது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ,தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 7 தமிழ்த் தேசியக் கட்சிகளும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சொந்த மண்ணில், முல்லைத்தீவு மாவட்டத்தில், குருந்தூர்மலையில் அமைந்திருக்கும் வரலாற்றுத் தொன்மைமிக்க இந்து ஆலயத்தின் சிதைவுகளையும் சிதிலங்களையும் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில், பழைய பௌத்த விகாரை ஒன்றின் மிச்ச மிகுதிகளாகவும், எச்ச சொச்சங்களாகவும் உரிமை பாராட்டி, அங்கே பௌத்த விகாரை ஒன்றை கட்டியெழுப்ப பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் முன்னெடுத்து வந்திருக்கும் முயற்சிகளை நீங்கள் அறிவீர்கள்.

பேரினவாதிகளின் ஆக்கிரமிப்புக்கும் அடாவடித்தனத்துக்கும் எதிராக, எமது மக்கள் தரப்பில் காட்டப்பட்ட எதிர்ப்பினால் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், புதிய கட்டுமானங்கள் எதுவும் நிறுவப்படக்கூடாது என்று நீதிமன்று வழங்கிய கட்டளையை மீறி, அவசரம் அவசரமாக புதிய விகாரை ஒன்று, அதிகாரத் தரப்பின் ஆதரவோடு கட்டப்பட்டு, முற்றுப்பெறும் நிலையில் எழுந்து நிற்கின்றது.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, தமிழ் மக்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட முறையீடுகளின் பேரில், அவற்றை நிறுத்த முயன்ற மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவை அடிபணிய வைக்க முயன்று, முடியாமற்போன இனவாத சக்திகள், நீதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் துவேசக் கண்டனங்களையும் கீழ்த்தரமான விமர்சனங்களையும் வெளியிட்டு பரப்புரைப் போர் ஒன்றைத் தொடுத்து வந்திருந்தன.

இந்தச் சூழ்நிலையின் உச்சக் கட்டமாக, அதிகாரமட்டத்தில் இருந்து அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்டன.

இந்தக் கேவலமான நடவடிக்கைகளுக்கு மனோரீதியாக தொடர்ந்தும் தாக்குப்பிடித்து நிற்கமுடியாத நிலையில், நீதிபதி சில தினங்களுக்கு முன்னர் தனது பதவியைத் துறந்து, நாட்டைவிட்டே வெளியேறிச் சென்றுள்ளார்.

இத்தனைக்கும் அவர் செய்த ஒரே தவறு, வளைந்து கொடுக்காமல், அடிபணியாமல் துணிச்சலோடும் நேர்மையோடும் தனது கடமையை சட்டத்தின் வழி நின்று செய்ததே ஆகும்.

ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் இருப்புக்கும், உரிமைக்கும், வாழ்வுக்கும் துணை நின்றதாலேயே அவர் இந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளார்.

இது மிகப் பாரதூரமான நிலைமை. துன்பத்தில் துவளும் எமது மக்களின் கடைசி நம்பிக்கையாக ஓரளவுக்கேனும் இருந்து வந்திருக்கும் நீதித்துறைக்கே சவால் விடுக்கப்படும் அபாயகரமான நிலைமை. இதனை நாம் எல்லோரும் கைகட்டிப் பார்த்திருக்கமுடியாது. எவ்வித்திலும் அனுமதிக்கமுடியாது.

இந்தச்சூழ்நிலையில், இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களின் இருப்பும், அடிப்படை உரிமைகளும் தொடர்ந்து குறிவைத்துத் தாக்கப்படுவதை உலகத்தின் கவனத்துக்கு மீண்டும் தீவிரமாக நாம் கொண்டு செல்லவேண்டும்.

சிறிலங்கா அரசின் பேரினவாத அரசியல் சித்தாந்தமும், நிகழ்ச்சி நிரலும் எம் மீது அராஜக அடக்கு முறைகளாக மீண்டும் மீண்டும் பாய்வதை, உலகின் கண்களுக்கு முன் நாம் வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டும்.

செய்யக் கூடாததை எல்லாம், எண்ணிக்கையில் சிறுபான்மையினராக வாழும் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்து கொண்டு, நாகரிக நடத்தை கொண்ட நல்ல பிள்ளையாக வெளியுலகுக்கு முன் நாடகமாடும் சிறிலங்கா அரசின் வஞ்சகத் தந்திரங்களையும், பொய்கள் நிறைந்த பரப்புரையையும் நாம் அம்பலப்படுத்தவேண்டும்.

ஆகவே, ஓரணி திரண்டு, நேர்வழி நின்று நீதி கோரி நாம் எழுப்பும் உரிமைக் குரல்கள் ஆக்ரோஷத்துடன் ஆர்ப்பரித்து எழவேண்டும்.

எனவேதான், தொடர்ந்து கொண்டிருக்கும் பேரினவாத ஆக்கிரமிப்புகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் அராஜகத்துக்கும் எதிரான எமது மக்களின் எதிர்ப்பியக்கத்தின் முதற்கட்டமாக, எதிர்வரும் 4ம் திகதி(நாளை) புதன்கிழமை காலை 9மணி அளவில் மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ். நகர் வரையில், காங்கேசன்துறை வீதி வழியாக, மாபெரும் மனிதச் சங்கிலியாக கைகோர்த்து, நீதி கோரிட திரண்டு வாருங்கள் என, உங்கள் அனைவரையும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளாகிய நாம் உரிமையுடன் அழைக்கின்றோம்.

மேலும், எம் மக்கள் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமை அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட மாணவர் அமைப்புகள், மகளிர் உரிமை நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், வணிகர் கழகங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தாபனங்கள் உட்பட, பல்துறை சார்ந்த செயற்பாட்டு இயக்கங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் நாம் நாடி நிற்கின்றோம் - என்றுள்ளது.

(அ-ஒ-26-125)

### பொலிஸ்...

தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவு நகரப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் பொலிஸ் நிலையக் கட்டடத்துக்குள் இருந்தே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ஒ-19)

### நீதித்துறையின்...

பழைய மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் முடிவில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெஸுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, கொழும்பில்வைத்து, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரே பிரான்ச் இன்று கையளிக்கப்படவுள்ள மனு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

கண்டனப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிளிநொச்சி நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் கிளிநொச்சியைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் போராட்டத்தில் பங்கேற்றனர். (அ-ஒ-27-113)

### வாகன...

எதிர்வரும் 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பொறிமுறை ஊடாக வீட்டிலிருந்தே மக்கள் வாகன வருமான வரி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளமுடியும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

(அ-ஒ-26-44)

### போதைப்பொருள்...

நபரும் விற்பனைக்கு என 179 கிராம் எடை கொண்ட உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருள் பொதியை கடந்த சனிக்கிழமை இரவு முருங்கன் பாடசாலைக்கு பின்புற மைதானத்தில் அம்புலன்ஸில் கொண்டு செல்ல முற்பட்ட போது பொலிஸார் கைது செய்ய முயன்றனர். ஆனால், அவர்கள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர். அம்புலன்ஸ் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் வவுனியா மருத்துவமனைப் பணியாளர் கைது செய்யப்பட்டாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இது தொடர்பில் மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிக்கையில்;

போதைப்பொருள் பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட அம்புலன்ஸ் வாகனச் சாரதி உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சாரதி அம்புலன்ஸ் வண்டியில் உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருளைக் கொண்டு சென்றபோது பொலிஸாரால் இடைமறிக்கப்படவில்லை. சாரதி சம்பவதினம் மாலை ஆறு மணி முதல் மருத்துவமனையிலிருந்து காணாமற் போயுள்ளார். அந்த நேரத்தில் அம்புலன்ஸ் மருத்துவமனையிலேயே இருந்துள்ளது. பின்னர் பொலிஸாரால் வாகனமும், சாரதியின் விடுதியும் சோதனையிடப்பட்டபோது அங்கும் போதைப்பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

அம்புலன்ஸ் சேவை இரண்டு நாட்களாக இடைநிறுத்தப்பட்டு எமது விசாரணைக் குழுவினரால் முழுமையாக சோதனை செய்யப்பட்டது. அதில் போதைப்பொருட்கள் எவையும் இருக்கவில்லை - என்றார். (அ-ஒ-213)

### எரிபொருள்...

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறையாகும் வகையில் எரிபொருள் விலையை அதிகரித்தது.

92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 365 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 420 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 351 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 62 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, 421 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 11 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 242 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இதனிடையே, இலங்கை - இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் (ஐ.ஓ.சி.) மற்றும் சினோபெக் லங்கா நிறுவனம் ஆகியனவும் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளன. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கிலியை அறுத்த 'சர்ப்ரைஸ் கிப்ட்'!

திருகோணமலை, ஒக். 3
திருகோணமலை நகரில் துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறீன் வீதியில் நேற்று முற்பகல் சுமார் 11 மணியளவில் 'சர்ப்ரைஸ்' பரிசு கொடுக்கவந்துள்ளதாகக் கூறி வேடமிட்டு வீட்டுக்குள் நுழைந்த நபரொருவர் மூதாட்டி அணிந்திருந்த ஐந்து பவுண் தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார்.
இலக்கத்தகடு இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு இளைஞரே இவ்வாறு தங்கச்சங்கிலியைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை துறைமுகப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம)

# காற்றாலை அமைப்பதற்காக மக்களின் காணி அபகரிப்பு!

## சிறப்புக் கலந்துரையாடலில் குற்றச்சாட்டு

மன்னார், ஒக். 3
**மன்னாரில் காற்றாலை அமைக்கும் திட்டத்துக்காக மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்று பேசாலைப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**



காற்றாலைகள் அமைக்கும் திட்டம் தொடர்பில் பேசாலை பங்குத்தந்தையின் ஏற்பாட்டில் சிறப்புக் கலந்துரையாடலொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
கலந்துரையாடலில் கலந்துகொண்ட பொதுமக்கள் தெரிவித்ததாவது:-
மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக மன்னார்த் தீவில் அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களை நசுக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே மன்னார் தென் கடலோரப் பகுதியில் 100 மெஹாவாட்ஸ் காற்றாலை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது இங்குள்ள மக்களின் எவ்வித ஆலோசனைகளும் இன்றியே அமைக்கப்பட்டுள்ளது.
இருப்பினும், காற்றாலை அமைக்கும் திட்டத்தை அந்தப் பகுதி மக்கள் எதிர்க்கவில்லை. இத்திட்டம் எமது நாட்டில் உருவாகவேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும். ஆனால் திட்டங்களைக் கொண்டு வரும்போது பொதுமக்கள் எவருக்கேனும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும். உதாரணமாக திட்டங்களுக்கான இட அமைவுகள் பரிசீலிக்கப்படவேண்டும். மன்னார்த் தீவில் தொடர்ந்து காற்றாலை அமைக்கும் பணிகள் தொடருமாயின், இந்தத் தீவில் வாழும் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் நிலையும் தற்பொழுது உருவாகியுள்ளது. ஆகவே இது தொடர்பாக உயர் அதிகாரிகளை இங்கு அழைத்து வந்து சரியான முறையில் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் - என்றனர். (ம-60)

## சங்கானையில் இன்று நல்லொழுக்க தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 3
சங்கானை வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில், சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மேற்படி நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ம-66)

## சிவில் பாதுகாப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 3
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/136 நவாலி தெற்கு கிராமஅலுவலர் பிரிவில் சிவில் பாதுகாப்புச் சம்பந்தமான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்படி கிராம அலுவலர் பணிமனையில் நடைபெற்றது. (ம-66)



## மகாத்மா காந்தியின் பிறந்ததின நிகழ்வுகள்


அகிம்சாவாதியான மகாத்மாகாந்தியின் 154ஆவது பிறந்ததின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலையடியில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டன.
நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. மேற்படி நிகழ்வில் மகாத்மாகாந்தியின் வரலாற்றுக் குறிப்புகளை உள்ளடக்கிய 'காந்தீயம்' இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டு நிகழ் வில் கலந்துகொண்ட அனைவருக்கும் பிரதிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.
குறித்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலா நிதி த.சத்தியமூர்த்தி, வடமாகாண அவைத் தலை வர் சி.வீ.கே.சிவஞானம், சிவபூமி அறக்கட்டளை யின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன், யாழ்.இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பிரதிநிதிகள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ம-66-27-20)

## சிறுவர்தின நிகழ்வுகள்

யாழ்.மல்லாகம் மகா வித்தியாலயச் சமூகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மேற்படி பாடசாலைமண்டபத்தில் அதிபர் சி.கனேசராசா தலைமையில் நடைபெறவுள்ளன.
குறித்த நிகழ்வில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.அரசகேசரி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ம-66)

## டெங்கு ஒழிப்பு: களத் தரிசிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3
டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இளவாலை ஜே/155 கிராமஅலுவலர் பிரிவில் நேற்றுத் திங்கட்கிழமை டெங்கு களத் தரிசிப்பு முன்னெடுக்கப்பட்டது.
மேற்படி டெங்கு களத் தரிசிப்பு நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், கிராமமட்ட டெங்குக் குழு அங்கத்தவர்கள் ஆகியோர் ஈடுபட்டனர். (ம-66)




**வேலையாட்கள் தேவை**
மேசன், கூலி வேலையாள்கள் தேவை.
074 177 1601

**IELTS Classes**
Personal / Direct / Online
Classes குறுகிய காலத்தில் பரீட்சைக்கு தயார்ப்படுத்தப்படும்
077 114 8894

**காணி விற்பனைக்கு**
புலோப்பளை பளையில் காணி விற்பனைக்குண்டு
தொடர்பு : 00 44 746646 4163

**மணமகன் தேவை**
1991 ம் ஆண்டு திவாதிரை நட்சத்திரமுடைய மணமகளுக்கு உள்நாட்டில் மணமகன் தேவை
தொடர்பு : 074 353 6881

**வாடகைக்கு**
பொன்னாலை வீதி, மானிப்பாயில் உள்ள நவீன வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்குண்டு.
077 464 8557


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.